
# Word Of Christ

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்

B. அர்ச்சுனன்

# ஆசிரியர் கடிதம்

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

இவ்விதழின் ஐந்தாவது வருட கடைசியிலும் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன் இம்மட்டும் கர்த்தர் இவ்விதழின்மூலம் அநேகருக்கு நற்செய்தியை அறிவிக்க எங்களை பெலப்படுத்தினார். இனிமேலும் பெலப்படுத்துவார் என நம்புகிறோம்.

ஒவ்வொருவரும் சத்தியத்தை அறிந்து பரலோக பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உள் நோக்கோடு இவ்விதழை தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம். இதற்கு உறுதுணையாக இருந்து வருகிற வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரைகர்த்தர்மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!

கர்த்தருக்குச் சித்தமானல் அடுத்த மாதம் முதல் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு இவ்விதழை தழை அனுப்ப இருக்கிறோம், உங்கள் நண்பருக்கு இவ்விதழ் தேவையானால், இன்றே முகவரியை ஆங்கிலத்தில் பின் கோடுடன் எழுதி எமக்கு அனுப்பிவைக்கவும்.

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்கிற ஒவ்வொரு சகோதர, சகோதரிகளுக்கு எங்கள் வாழ்த்துக்கள். தொடர்ந்து கலந்து கொண்டுவேத அறிவை பெருக்கிக்கொள்ளுங்கள். மற்றவர்களையும் இதில் கலந்து கொள்ள உற்சாகப்படுத்துங்கள். உங்கள் யாவருக்காவும் ஜெபிக்கின்றோம். தேவ கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக!.

தேதி:-10-7-97 அன்புடன் ஆசிரியர்

இடம்:- வத்தலக்குண்டு. B. அர்ச்சுணன்

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 5 ஜூலை 1997 கனி 12


## தேவன் அருளிய அப்பம்

### The bread, given by God.

வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்று யோ 6:33ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடுவதை வாசிக்கின்றோம். உலகத்திலுள்ள சகல ஜாதிகளையும் பிசாசின் பிடியிலிருந்து மீட்க தமது ஜீவனையே கொடுக்க வானத்திலிருந்து இறங்கி வந்தார் இவரை தம்முடைய குமாரனென்றும் பாராமல் தேவன் சிலுவை பாடுகளுக்கு ஒப்புக் கொடுத்தார். சகலத்தையும் நிறைவேற்றி சிலுவையில் இயேசு கிறிஸ்து வெற்றிச் சிறந்தார்.

பிரிய நண்பரே! இந்த அருமை ஆண்டவர் இயேசுவை உங்கள் வாழ்க்கையில் ஜீவ அப்பமாக ஏற்று கொண்டிருக்கிறீர்களா? இவரையே தேவன் நமக்கு அருட்கொடையாக இவ்வுலகத்துக்குக் கொடுத்திருக்கிறார் இவர் மத் 28:18ல் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார். பூமியில் சகல அதிகாரமும் பெற்ற இந்த அருமை ஆண்டவர் இயேசுவை விட்டு செத்த கிரியைகளுக்கு நாம் ஏன் திரும்ப வேண்டும். இவரையும் இவருடைய வார்த்தையையும் உங்களுடைய ஜீவனுக்குரிய அப்பமாக ஏற்றுக் கொள்ளும் போது உங்கள் வாழ்க்கையில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடைவீர்கள்.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார் மத் 11:28-30 மனிதன் தன்னுடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் தேடி கன்னியாகுமாரி முதல் காஷ்மீர் வரையும் மற்றும் உலகில் பல இடங்களுக்குச் சென்றும் ஆத்தும நிம்மதியில்லாது திரிகிறதை. நம்முடைய அனுதின ஜீவியத்தில் பார்க்கிறோம் ஏன் நிம்மதியற்று அலைய வேண்டும்? ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கொடுப்பவர் வானத்திலிருந்திறங்கி வந்த இயேசு ஒருவரே அவரிடம் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது இளைப்பாறுதல் அடைவீர்கள்.

நம்முடைய அனுதின சரீர ஜீவியத்திற்கு அப்பம் எவ்வளவு அவசியமாகியிருக்கிறதோ அதேபோல் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு (ஆத்துமாவுற்கு) கிறிஸ்துவின் சரீரமாகிய அப்பம் மிக அவசியமாயிருக்கிறது. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் மாமிசமே என்றார் யோவா 6:51. இந்த அப்பத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாரத்தின் முதல் நாள்தோறும் புசித்து நினைவு கூர வேண்டுமென்று பார்க்கிறோம். இது உலகத்தின் ஜீவன்களாகிய நமக்கு அவர் கொடுத்த மாமிசம் அந்த மாமிசமாகிய அப்பத்தை நாம புசிக்கும்போது என்றென்றைக்கும் பிழைப்போம். இச்செய்தியை வாசிக்கிற பிரிய நண்பரே! நீ அவரை ஏற்று, அவருடைய மாமிசதை புசிக்க தகுதியுடையவராயிருக்கிறாயா? அப்படியில்லையென்றால் இன்றே தகுதியடைய உன்னை ஆயத்தப்படுத்து.

ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில்வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் என்றார் யோ 6:35. திருப்தியுள்ளவன் தேன் கூட்டையும் மிதிப்பான். அவரை விசுவாசிக்கிறவன். அவரில் நிலைத்திருக்கிறவன ஒருக்காலும் பசியடையான். காரணம் ஏன்? அவன் கிறிஸ்துவுக்குள்ளாக ஜீவிக்கும் போது கர்த்தர் அவனை ஆசீர்வதிக்கிறார் அவனுக்குரிய அப்பமும் தண்ணீரும் குறைவில்லாமல் கொடுக்கப்படுகிறது.

ஒருச்சாண் வயிற்றுக்குத் தான் இந்தப்பாடு என்ற வார்த்தையை அநேகர் சொல்ல கேள்விப்பட்டிருப்பீர்கள். பிரியமானவர்களே! வெறும் வயிற்றுககாக நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக்கூடாது.

ஆகாயத்துப் பட்சிகளை கவனித்து பாருங்கள் அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை. ஆனாலும் தேவன் அவைகளையும் பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நாம் விசேஷித்தவர்கள். எப்படியென்றுகேட்கிறீர்களா? நாம்தேவசாயலில் உண்டாக்கப்பட்டவர்கள் ஆகையால் வாழ்க்கையில் சோர்ந்து போகாது சகலத்தையும் போஷிக்கிறவர் நம்மையும் போஷிப்பார் என்று அறிந்து தேவன் நமக்குக் கொடுத்த அப்பமாகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்று அவர் நமக்கு வைத்துச்சென்ற அடிச்சுவடுகளைத் தொடர்ந்து பின்பற்றுவோமாக!.

## இயேசு கிறிஸ்துவின் அற்புதங்கள்

### Miracles of Jesus Christ

கிறிஸ்து இவ்வுலகில் இருந்தபோது அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் அற்புதங்கள் செய்தார் என்பதற்கு ஆதாரம்

என்ன என்று கேட்டால், அவருடைய சொந்த சீஷர்களும் நண்பர்களுமே, மேலும் அவருடைய விரோதிகளே ஒத்துக் கொண்டிருக்கின்றனர்.

பிரதான ஆசாரியரும், பரிசேயரும் ஆலோசனை சங்கத்தை கூடவரச்செய்து, நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அனேக அற்புதங்களைச் செய்கிறானே, நாம் இவனை இப்படியே விட்டு விட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள். அப்பொழுது ரோமர் நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப்போடு வார்களே என்றார்கள். பரிசேயர்கள் இதை கேள்வியுற்று பெயல் செபூலை வைத்துக்கொண்டு, பிசாசுகளை துரத்துகிறான் என்று கூறினார்கள் நடு நிலைமை வகிப்பவர்களும், இரண்டிலும் சோரா தவர்களும் கிறிஸ்துவின் அற்புதங்களை ஏற்றுக்கொள்கிறவர்களாகவே இருந்தனர். இயேசு சகல பட்டணங்களையும், கிராமங்களை சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி அவர்களை சொஸ்த மாக்கினார். இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு கலிலேயா கடல ருகே வந்து, ஒரு மலையின் மேல் ஏறி அங்கே உட்கார்ந்தார்.

அப்பொழுது சப்பாணிகள் குருடர்கள் ஊமையர் ஊனர் முதலிய அநேகரை திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்தில் வைத்தார்கள். அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார். மற்றும் இயேசு ஐந்து அப்பத்தையும் 2 மீனையும் கொண்டு 5000 பேரை போஷித்தார். இன்னும் குஷ்ட ரோகிகளை குணப்படுத்தி இருக்கிறார். சூம்பின கையையுடைய ஒருவனை சொஸ்தப்படுத்தி இருக்கிறார் மேலும் மரித்தோரிலிருந்து லாசருவை எழுப்பி இருக்கிறார்.

கிறிஸ்து இந்த அற்புதங்களை செய்யாமலிருந்திருந்தால் அவருடைய நேர்மையும்,குணமும் அழிந்து போயிருக்கும். அவர் ஒரு ஏமாற்றுக்காரனாக இருந்திருப்பார். அற்புதங்களை செய்கிறேன் என்று கூறிவிட்டு, செய்யாமல் போன பொய்யனாக இருந்திருப்பார். கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார் என்று கூறி இருக்கும் புதிய ஏற்பாடும் நம்பத்தகாத ஒன்றாக ஆகி இருக்கும்.

இனி கிறிஸ்து அற்புதங்களை செய்ததற்கான நோக்கத்தை ஆராய்வோம். முதலாவது அவருடைய அற்புதங்கள் அவர் தான், தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று மக்கள் நம்பும்படி செய்வதற்கு செய்யப்பட்டன யோவான் கூறுகிறார் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச்செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும்

மாக்கினார். மரித்தோரை உயிரோடு எழுப்பினார். இன்றும் அந்த காரியங்களை செய்கிறார். நாமும் தேவனுடைய வல்லமையினாலே ஒரு பரிபூரண ஜீவியத்தை இந்த உலகில் ஜீவித்து, நித்திய நாளுக்கான நம்பிக்கையுடன் இருக்க முடியும். பரத்தைப்பற்றிக்கொண்டு உலகத்தை ஜெயிக்கக் கூடிய சக்தியை பெறுவோம் எனவும் நாளும் இடத்தை பெறுவோம். எப்பொழுதும் பூமிக்குரிய கண்ணோட்டத்திலே செயல்படக்கூடாது. நித்தியத்தை மனதில் கொண்டவர்களாக பரலோகத்தின் அடிப்படையில் காரியங்களை நோக்குகிறவர்களாக இருக்கவேண்டும். எந்த தடைகளையும் பொருட்படுத்தாது எல்லாம் நன்மைக்கே என்ற மனோபாவத்தில் ஜீவிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் உரைத்தவண்ணமாக புறம்பான மனுஷன் அழிந்தும், உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறான். மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் என்று பார்க்கிறோம்.

நம்முடைய குறிக்கோள் எல்லாம் தேவனுடைய நீதியை நிறைவேற்றுகிறவைகளாக இருக்க வேண்டும் என்பதே. அவருடைய சித்தத்தை செய்து, அவரைப் பிரியப்படுத்த வேண்டும் என்பதே. அதைத்தான் கிறிஸ்துவும் ''ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை எல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்'' இங்கு நன்றாகக் கவனியுங்கள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் என்றார். கிறிஸ்துவினால் குருடனுடைய கண்களை திறக்க முடிந்தது. இன்றும் நம் ஆவிக்குரிய கண்களை திறந்து நம் வாழ்க்கையில் வெளிச்சத்தை கொடுக்க முடியும். கிறிஸ்து எல்லா வியாதிகளையும் சொஸ்தமாக்கினார். இன்றும் நம் பாவ வியாதியினின்று நம்மை அவர் குணப்படுத்தி சமாதானத்தை கொடுக்க சித்தமாயிக்கிறார். அன்று கிறிஸ்து பொங்கி வந்த கடலை அமைதிப்படுத்தினார் இன்றும் நம் வாழ்வில் ஏற்படும் எல்லா புயலினின்றும் நமக்கு அமைதி காட்ட சித்த மாயிருக்கிறார். அன்று மரித்துபோன லாசருவை உயிரோடு எழுப்பினார். இன்று பாவத்தினாலும் அக்கிர

மங்களினாலும் மரித்தவர்களாகிய நம்மை உயிர்ப்பிக்கிறார். நம் மரணத்தை வென்று நித்திய ஜீவனை பற்றிக்கொள்ளும் சிலாக்கியத்தை கொடுக்கிறார். கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவின் அற்புதங்கள், அவருடைய தெய்வீகத்தன்மையை நிரூபிக்கக்கூடிய சாட்சியங்களாக இருந்த போதிலும், ஒரு தேவனுடைய பிள்ளைக்கு கிறிஸ்துவின் வல்லமை தன் ஜீவியத்தில் எவ்வாறு கிரியை செய்யும் என்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும்.

முடிவில் நித்திய ஜீவன் பரலோகத்தை கொடுப்பார் என்பதற்கான வாக்குத்தத்தம். திருடன் திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார் கிறிஸ்து. மேலும் அவர் கூறுவதாவது, என் ஆடுகள், என் சத்தத்திற்கு செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்கு பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனை கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.

அன்புள்ள வாசகர் நண்பனே. கிறிஸ்து இவ்வுலகில் இருந்த போது அநேக அற்புதங்களை செய்து. தான் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபித்து, பின் பாவிகளான நமக்காக அவர் ரத்தம் சிந்தி மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார். அவர் என்றும் ஜீவிக்கிறார். இன்றும் விசுவாசிகளின். இருதயத்தில் ஜீவிக்கிறார் நீ அவரை விசுவாசிக்கிறாயா?

இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது யோவா 20: 30-31.

இன்றே அவருக்கு ஒப்புக்கொடுக்க மாட்டாயா? அவர் உன்னை அன்போடு அழைக்கிறார். நீ அவரைத்தள்ளாதே ஏற்றுக் கொள். இவைகளைக்குறித்து இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ள வாஞ்சித்தால், எங்களுக்கு எழுதுங்கள். கர்த்தர் தாமே இம்முயற்சியில் உங்களை வழிநடத்துவாராக.

P.R. SWAMY
Bangalore.

## பெண்கள் பகுதி

மாத இதழின் தொடர்ச்சி:

ருஷ்ய மன்னர் அலெக்சாண்டர் III , 1885 - 1888 க்கு இடைப்பட்ட காலத்தில் மகதலேனா மரியாள் ஆலயம் என்ற ஆலயத்தை தன் தாயின் நினைவாகக் கட்டினார்

இது, மரியாள் தன் வாழ்நாட்களைக் கழிக்கும்படி தனியாக மக்தலாவுக்கு திரும்பிவிட்டாள் என்று அர்த்தமா? அல்லது எருசலேமில் பரிசுத்த ஆவியை பெறும்படி சீஷர்களோடு காத்திருந்த ஸ்தீரிகளோடே போய் ஐக்கியபட்டு கொண்டாளா? அதிச்சபையில் மற்ற ஸ்தீரிகளின் ஊழியத்தில் தலைமை பொறுப்பை பெற்றாளா?.

பிசாசின் பிடியிலிருந்து நீங்கிய மக்தலா என்ற ஊரைச் சேர்ந்த இந்த மரியாள் நன்றியுணர்வு மிக்கவள் என்பதற்கு ஒரு முன் மாதிரியாக விளங்குகிறாள். இவள் இயேசு தனக்குச்செய்த நன்மைகளை ஒரு போதும் மறக்கவில்லை. இவள் தன் உன்னத குணத்தை இயேசுவுக்கு செய்த தன் ஊழியத்தின் மூலம் காண்பித்து விட்டாள். அது மாத்திரமல்ல, அநேகர் பின்பற்ற தகுந்த நற்குண சாலியாகவும் அநேகருக்கு நல்மாதிரியாகவும்இவள் விளங்குகிறாள்,

Sylvia L. Camp,
The Voice of Truth
International

Glory Arjunan,
Batlagundu

---

★ சபைசெய்திகள்

1. ஜூன் 19 ம் தேதி சகோதரிகளுக்கான கூட்டம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்றது. சிலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

2. ஜூன் 22ம் தேதி வாலிபர்களுக்கான கூட்டம் மேற்கண்ட இடத்தில் நடைபெற்றது சில வாலிபர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

★ தேவை! தேவை!! தேவை!!!

கிறிஸ்துவுக்கு தன்னை முழுவதுமாக அர்ப்பணித்த வாலிப ஊழியர் பகுதி நேரம் அல்லது முழுநேரம் பணியாற்ற உடன் தேவை (கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்) கீழ்கண்ட புதிய முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

P. PHILEMON RAJ, Preacher
Madurai Central Church Of Christ,
T-178, Ellis Nagar,
Madurai - 625 010

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI:** Sundays 8:45 P.M-9.00 P.M.and Thursdays, 9.00 P.M.-9:15 P.M, Speaker. Sunny David, Box 3815 NewDelhi-10049.

**ENGLISH** Fridays, 7:45 P.M.-8:00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi -110049.

**TELUGU :** Sundays, Tuesdays, Thursdays, 2: 15 P.M. - 2:30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada 533001.

**TAMIL:** Sundays and Thursdays, 6:45 P.M. - 7:00 P.M., Speaker, P.R. Swamy, Box 8405, Bangalore 560084.

**MALAYALAM:**
Fridays, 3:45 P.M. - 4:00 P.M. Speaker P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Thiruvananthapuram- 695034.

**KANNADA:** Sundays 1:45 P.M. 2.00 P.M Speaker, Robert Ratnakar Box 448, Bangalore- 560004.

Please write to these addresses for Bible correspondence courses, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

PRINTED MATTER

If undelivered Please return to:

# THE EDITOR

WORD OF CHRIST
Post Office Box No.5.
Batlagundu 624 202
S. India
☎ (04543) 23278

TO

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கிறோம்
ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45
கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5 ராஜன்நகர்
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு 624 202

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST. Regd No. 84661-92
Registerd No. TN/DDL/19

Edited and Published by B. Arjunan M.A., A.Bs., behalf of Church of Christ 2.2.102 D/5 Rajan nagar
BTL Printed by C. Pandiyarajan B.Sc.. SHANTHI PRINTERS Main Road Batlagundu 624 202